## நிலச்சீர்திருத்தத்தையும் நிலத் தொகுப்பினையும் செயற்படுத்துதல்

**(இனம் . 2 (அ))**

01. நிலச்சீர்த்திருத்தத்தின் நோக்கமானது, சமூக நீதிக்கண்ணோட்டத்திலிருந்து நில உடமைகளின் உரிமையை மறு பங்கீடு செய்வதும், நிலத்தின் உச்ச பயன் பயன்பாட்டுக்காக உடைமை இயங்கு முறையினை மாற்றியமைத்தலும் ஆகும். இதனுடன் கூட குடிவாரச்சிக்கலும் இருக்கிறது. அதாவது, நில உடைமைகளின் உரிமைகளும் நிலைமைகளும் நீலச்சீர்திருத்தங்கள் நோக்கம் (குடிவார குத்தகைக்குக்கு) பாதுகாப்பு ஏற்படுத்துதல், குத்தகையை அறுதியிடல் உடைமையினை அளித்தல் முதலிய நிலச்சீர்திருத்தத்தினுடைய எண்ணம் முழுவதும் இடைத்தரகர்களை ஒழிப்பதிலும் உண்மையான உழவரை அரசின் நேரடித் தொடர்புக்குக் கொண்டு வருதலிலுமே உள்ளது. இத்துடன், குடிவாரப் பாதுகாப்பிற்கும் குத்தகைக்கும் வழிவகை செய்வதுடன் ஒழுங்குபடுத்தி ஒரு உகந்த சூழலை உருவாக்கி உழவர்கள் தங்களுடைய உழைப்பின் பயனைத் துய்க்கும் உறுதியை உணரச் செய்தலுமாகும்.

02. 1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச்சீர்திருத்தங்கள் சட்டம் (நில உச்சவரம்பை அறுதியிடல்) உழவு நிலங்களினுடைய உரிமையாளர்கள் வேறுபாட்டை குறைக்கும் நோக்குடனும் இத்தகைய நிலங்கள் ஒரு சிலரிடம் குவிந்துகிடப்பதை மாற்றி நிலமில்லா ஏழைகளுக்கு இந்நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் எண்ணத்துடனும் சட்டமாக்கப்பட்டது. இச்சட்டம் 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் 6ம் நாள் நடைமுறைக்கு வந்தது. தொடக்கத்தில், ஒரு குடும்பத்திற்கு 60 திட்டமான ஏக்கர்கள் உச்சவரம்பாக அறுதியிடப்பட்டது. 1.3.72 முதல் 5 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குடும்பத்திற்கு 15 திட்ட ஏக்கராகக் குறைக்கப் பட்டு கூடுதல் உறுப்பினர் ஒவ்வொருக்கும் கூடுதலாக 5 திட்ட ஏக்கர்கள் அனுமதிக்கப்பட்டு உச்ச அளவாக 30 திட்ட ஏக்கர்கள் என வரையறுக்கப்பட்டது. உச்ச வரம்புக்கு மிகைப்பட்ட நிலம், 1965 ம் ஆண்டு தமிழ்நாடு நில சீரமைப்பு (உபரிநில பங்கீடு) சட்டத்தின் கீழ் தகுதி பெற்ற நிலமற்ற ஏழைகளுக்கு 3 ஏக்கருக்கு மேற்படாத புன்செய் நிலம், அல்லது 1½ ஏக்கர் நன்செய் நிலம் பகிர்ந்தளிக்க கையகப்படுத்தப்பட்டது.

03. இந்திய அரசு, இத்தகைய உச்ச வரம்புக்கு மிகைப்பட்ட நிலத்தை ஒதுக்கீட்டாகப் பெற்றவர்களுக்கு நிதி உதவியளிக்கும் மத்திய அரசின் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. எக்டேர் ஒன்றுக்கு ரூ.2,500 வீதம் நிதிஉதவி தரப்படுகிறது. இச்செலவை மத்திய மாநில அரசுகள் சமமாகப் பகிர்ந்து கொள்கின்றன. இந்த திட்டத்தின் கீழ் சிறப்பு ஏற்பாடொன்று ஆதி திராவிட வகுப்பினர் மற்றும் ஆதி திராவிட பழங்குடியினர் பயன்பெறும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளது.

04. இதோடு கூட வேளாண்மைச் சீர்திருத்தங்களை நடைமுறைக்குக்கொண்டுவர குத்தகை சட்டங்களை அரசு அறிமுகப்படுத்தியது.

அவற்றில் முக்கியமானவை சில :

(i) 1955 ஆம் ஆண்டைய தமிழ்நாடு குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம்

(ii) 1956 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உழவுக் குத்தகைதாரர் (நியாயமான குத்தகை வழங்கல்) சட்டம்

(iii) 1961 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டம்

(iv) 1961–ஆம் ஆண்டைய தமிழ்நாடு நில பொது பொறுப்பாட்சிகள் (வேளாண்மை நில நிர்வாகத்தை முறைப்படுத்தல்) சட்டம்

(v) 1969–ஆம் ஆண்டைய தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமை ஆவண சட்டம் (1969–ஆம் ஆண்டு தமிழ் நாடு சட்டம் எண்.10)

(vi) 1971–ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்போர் குடியிருப்பு உடைமை உறுதிபடுத்தல் (தமிழ்நாடு சட்டம் 40/ 71) சட்டம்

(vii) 1976 ஆம் ஆண்டைய ஊரகக் கைவினைஞர் (குடியிருப்பு உரிமை உறுதிப்பாடு) சட்டம் (குடியரசுத் தலைவர் சட்டம் 1976ன் 38வது பிரிவு)

(viii) 1990–ஆம் ஆண்டைய தமிழ்நாடு குடியிருப்பு சட்டத்திருத்த சட்டம் (தமிழ்நாடு சட்டம் 39/ 1990)

05. நிலச்சீரமைப்பு வழக்குகளின் தீர்வை விரைவுபடுத்தும் நோக்கில் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நிலத்தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூரில் ஒரு நில தீர்பாயம் மாநில முழுவதுக்குமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. நான்கு வருவாய் நீதி மன்றங்கள் தனித்துணை ஆட்சியர்கள் கட்டுப்பாட்டின் கீழ் சேலம், விழுப்புரம் இராமசாமி படையாச்சியார், மதுரை, திருநெல்வேலி கட்ட பொம்மன் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. தனித்துணை ஆட்சியர்கள், வருவாய் நீதிமன்றங்கள் தொடர்புடைய வட்டாட்சியரின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை முடிவு செய்யும் மேல்முறையீட்டு அதிகாரிகளாக இருக்கிறார்கள்

## தற்போதைய நிர்வாக அமைப்பு முறை :

06. வருவாய்துறை, எல்லா நிலங்களுக்கும் பாதுகாவலனாக இருக்கிறது. எல்லா நிலத்தீர்வுக்கும் தொடர்புடையதாக அது இருக்கிறது. நிலக்கையகப்படுத்துகை, நில ஒதுக்கீடு, நிலஉரிமை மாற்றல், நில வருவாய் ஆவனங்கள் பராமரிப்பு, பட்டா வழங்குதல், நிலச்சீரமைப்பு, நில உச்சவரம்பு, வரி விதிப்பும் நகர்புற நில வரி மற்றும் வேளாண்மை வருமான வரி தொடர்பான வரி விதித்தல் மற்றும் திரட்டல் முதலான பணிகள் யாவும் வருவாய்துறையால் மேற்கொள்ளப்படுகிறது.

07. 1994 ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிச்சட்டம் (தமிழ்நாடு சட்டம் 1994ல் 21வது பிரிவு) அறக்கட்டளைகள் மற்றும் இனாம் மாற்றம், புறம்போக்குகள் பயன்பாடு ஊராட்சிகளினுடைய சமுதாய நிலங்கள் தொடர்பான சில அதிகாரங்கள் அளிக்கிறது. இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கீழ்கண்டுள்ள ஏற்பாடுகள் செயற்படுத்துவது இன்றியமையாதாகிறது.

மேற்படி சட்டத்தின் பிரிவு 122 வழங்கியுள்ளவை. நிலைக் கட்டளைகளின் அல்லது இனாம்களின் கட்டுப்பாட்டை மாற்றம் செய்வதற்கு அல்லது திரும்பக் கைக்கொள்வதற்கு நில நிர்வாக ஆணையருக்குள்ள அதிகாரம்

(1) (a) அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, நில நிர்வாக ஆணையர். அறிவிக்கை வாயிலாக 1817 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலைக்கட்டளைகள் மற்றும் அரசு உறுபொருள்கள் ஒழுங்கு முறை விதிகளின் வகை முறைகளின்படி, நில நிர்வாக, ஆணையருக்கு இணைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகளைப் பொறுத்த வரையில், அறநிலைக்கட்டளை எதனின் நிருவாகத்தையும் கண்காணிப்பையும், வட்டார ஊராட்சி மன்றமொன்றிற்கு அதன் இசைவுடன் வழங்கலாம், மற்றும் அதன் பேரில் அவை பொறுத்தவரையில் நில நிர்வாக ஆணையரிடம் இணைக்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் கடமைகளும், மேற்சொல்லப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகளில் தனிவகையில் அது பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாற்போன்று வட்டார ஊராட்சி மன்றத்திடம் இணைந்திருத்தல் வேண்டும் மற்றும், அத்தகைய நிலைக்கட்டளையை, வட்டார ஊராட்சி மன்றம் நிர்வகித்துக் கண்காணித்து வருதல் வேண்டும்.

(b) நில நிர்வாக ஆணையர் (a) எனுங் கூறின்படி ஓர் வட்டார ஊராட்சி மன்றத்திற்கு மாற்றியளிக்கப்பட்டுள்ள, நிலைக்கட்டளை எதனின் நிர்வாகத்தையும், கண்காணிப்பையும் அறிவிக்கை ஒன்றின் மூலமாகத் திரும்பக் கைக்கொள்ளலாம். ஆனால், அவ்வாறு செய்ய வேண்டுமென்று அரசிடமிருந்து பணிப்புரை வந்திருப்பின் அவர் அவ்வாறே செய்தாக வேண்டும், அவ்வாறு திரும்பக் கைக்கொள்ளப்படுவதன் பேரில், அந்த நிலைக்கட்டளையைப் பொறுத்த வரையில் வட்டார ஊராட்சி மன்றத்திடம் இணைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள் அனைத்தும் அற்றுப்போதலு, முடிவுற்றுப் போதலும் வேண்டும்.

2) அரசு தன்னால் அல்லது பிற அதிகார அமைப்பு எதனாலேனும் திரும்பக் கைக்கொள்ளப்பட்ட அறக்கட்டளை இனாம் ஒன்றை வட்டார ஊராட்சி மன்றம் ஒன்றிடம், அதன் இசைவுடன் குறித்தளிக்கலாம். ஆனால் அத்தகைய இனாமிலிருந்து பெறுகிற நிகர வருமானமானது, அத்தகைய வட்டார ஊராட்சி

மன்றத்தின் நிதியங்களை முற்றிலும் எந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தபடக் கூடுமோ அந்த நோக்கத்திற்கு பயன் படுத்தப்படலாம், மற்றும் அவ்வாறு குறித்தளிக்கப்பட்டதை அரசு நீக்கிவிடவும் செய்யலாம்.

3) ஊராட்சி வளர்ச்சி வட்டாரம் எதற்காகவும் கடைசியாக வட்டார ஊராட்சி மன்றமொன்று அமைத்துரு வாக்கப்படுவதற்கு முன்பு, 1920–ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் குழுமங்கள் (வாரியங்கள்) சட்டத்தின்படி மாவட்டக் குழுமமொன்றிடம் (வாரியத்திடம்) மேவியிருந்த நிலைக்கட்டளை எதனினும் நிர்வாகமும் கண்காணிப்பும், நிலைக்கட்டளை அமைத்திருக்கின்ற இடத்தின் மீது அதிகார வரம்பு செலுத்துகின்ற வட்டார ஊராட்சி மன்றத்திடம் மேவியிருந்தல் வேண்டும்.

சட்டப்பிரிவு 123. வட்டா ஊராட்சி மன்றத்தின் அலுவல்களைக் கூடுதலாக்க அரசிற்குள்ள அதிகாரம்.

விதிக்கப்படும் விதிகளுக்கு உட்பட்டு, வட்டார ஊராட்சி மன்றத்திற்கு அதன் சம்மதத்துடன் எந்த நிலையத்தின் நிர்வாகத்தையும் அல்லது எந்த வேலையை நிறைவேற்றுதலையும் அல்லது பேணுதலையும் வட்டார ஊராட்சி மன்றத்தின் உள்ளவாவோ அல்லது வெளியேயோ இந்தச் சட்டத்தில் ஏற்பாடு செய்திருந்தாலும் இல்லாவிட்டாலும், அரசாங்கம் நில நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது வருவாய்க் கோட்ட அலுவலர் அல்லது எவரும் அல்லது எந்தக் குழுவினரும் ஒப்புக் கொள்ளப்படும் வரையறைகளுக்குட்பட்டு மாற்றுதல் செய்யலாம்.

சட்டப்பிரிவு 134. இரயத்துவாரி நிலப்பரப்புகளிலுள்ள குறித்த சில புறம்போக்குகளைப் பயன்படுத்துவதை ஊராட்சி முறைப்படுத்துதல்

(1) இப்பிரிவின் விதிகள் இரயத்துவாரி நிலப்பரப்புகளுக்கு மட்டுமே பொருந்தும்.

(2) கீழ்க்காணும் புறம்போக்குகள், முறையே மேய்ச்சல் நிலங்கள் கதிரடிக்கும் களங்கள், சுடுகாடுகள் அல்லது இடுகாடுகள், கால்நடைத் தொழுவங்கள் வண்டிப் பேட்டைகள், தோப்புகள் ஊராட்சிகை சேரும் நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும், தடைகளுக்கும் உட்பட்டு மேற்சொன்ன புறம்போக்குகளின் உபயோகத்தை இப்புறம்போக்குகள் அரசாங்கத்திற்கு உட்பட்டவையென்றால் ஒழுங்கு செய்யும் அதிகாரம் ஊராட்சிக்கு உண்டு.

(3) மாவட்ட ஆட்சியர் ஊராட்சியுடன் கலந்து கொண்டு அறிவிக்கை மூலமாக (2) ஆம் உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு புறம்போக்கை, இந்தச் சட்டத்தின் அமலிலிருந்து நீக்கிவைக்கலாம். அவர் இந்த அறிவிக்கையை மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(4) நிர்ணயிக்கப்படும் கட்டுப்பாடுகளுக்கும், தடைகளுக்கும் உட்பட்டு, அரசாங்கத்தின் ஆட்சியிலுள்ள வேறு எந்த ஒரு புறம்போக்கின் உபயோகத்தையும் ஒழுங்கு செய்ய ஊராட்சிக்கு அரசாங்கம் ஒரு ஆணையால் அப்படிச் செய்ய அனுமதியளித்திருந்தால், ஊராட்சிக்கு அந்த அதிகாரம் வந்துசேரும்.

(5) நிர்ணயிக்கப்படக் கூடிய கட்டுப்பாடுகளுக்கும் தடைகளுக்கும் உட்பட்டு ஊராட்சி (2) ஆம் அல்லது (4) ஆம் உட்பிரிவின் கீழ் உபயோகத்தை ஒழுங்குபடுத்தும் உரிமையுள்ள புறம்போக்கில் மரங்கள் நடலாம்.

சட்டப்படி 135. தமிழ்நாடு 1908 ஆம் ஆண்டு எஸ்டேட்டுக்கள் நிலச் சட்டத்தின் ஆளுகைக்குட்பட்ட பண்ணை தோட்டத்திலுள்ள சில பொது நிலங்களின் உபயோகத்தை ஊராட்சி முறைப்படுத்துல்

(1) 1908 தமிழ்நாடு நிலச் சட்டத்திற்கு (தமிழ்நாடு சட்டம் 1 1908 உட்பட்ட எஸ்டேட் நிலங்களில் அச்சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும் குறிப்பிடப்படும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு ஊராட்சிக்குக் கீழ்கண்ட அதிகாரங்கள் இருக்கும்.

(a) அந்தச் சட்டத்தின் 3வது பிரிவின் (16) உட்பிரிவு (b) கூறில் சொல்லப்பட்டிருக்கும் நோக்கங்களுக்காக விடப்பட்டிருக்கும் நிலங்களின் உபயோகத்தை முறைப்படுத்துதல் அந்நிலங்களாவன; கதிரடிக்கும் களம்,

கால்நடைத் தொழுவம், ஊர் நத்தம் இன்ன பிற, அந்த ஊர் மக்களின் பொது உபயோகத்திற்காக விடப்பட்டிருக்கும், அந்த ஊருக்குள் இருக்கும் நிலங்கள்.

(b) அச்சட்டத்தின் 20–ஏ–வது உட்பிரிவில் சொல்லப்பட்டிருக்கும் மாவட்ட ஆட்சியரின் அதிகாரங்களை பயன்படுத்துதல், அதாவது (a) கூறில் குறிப்பிடப்பட்டிருக்கும் நிலம் முதலில் எதற்கென விடப்பட்டதோ அதற்குத் தேவைப்படாதவிடத்து வேறொரு உபயோகத்துக்கு மாவட் ஆட்சியரின் அனுமதி பெற்றிருந்தால், அனுமதியளித்தல்.

(c) கூறு (a) –யின் மூலம் நிலங்களின் உபயோகத்தை முறைசெய்யும் உரிமை பெறும் ஊராட்சிகள் அவற்றில் மரம் நடல்.

இச்சட்டத்தினால் அல்லது இதனடியில் இயற்றப்படும் விதிகளினால் நிலம் எடுக்க ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சி மன்றத்துக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தால் அதனை நிலம் எடுப்பு சட்டம் 1894 (மத்திய சட்டம் 1,1894) விதிகளின் படி கைப்பற்றலாம். அச்சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கும் ஈட்டுத் தொகையும் கைப்பற்றுவதற்கு ஆன செலவுகளும் கொடுத்த பிறகு அந்தச் சொத்து அந்த ஊராட்சி அல்லது வட்டார ஊராட்சி மன்றத்துக்கு சொந்தமாகும் (சட்டம் 137). ஒவ்வொரு ஆண்டிலும் அந்த மாநிலத்தில் வசூலாகும் நிலவரி (நீர்வரி உட்பட) தொகையிலிருந்து அரசாங்கம், ஒவ்வொரு வட்டார ஊராட்சி மன்றத்துக்கும் அந்த ஊராட்சி வளர்ச்சி வட்டாரத்திலுள்ள மக்களின் கணக்கின் மேல் நபருக்கு ஒரு ரூபாய் விதம் கணக்கிட்டால் வரும் தொகைக்கு சமமான ஒரு தொகையைத் தரவேண்டும் இப்படி வட்டார ஊராட்சி மன்றத்துக்கு வரவு வைக்கப்படும் தொகை, அந்த வட்டார நிலவரி ஒப்படைப்புத் தொகையாக குறிப்பிடப்படும்.

08. சற்றேறக்குறைய கடந்த 50 ஆண்டுகளாக சீரிய முயற்சிகள் மேற்கொள்ளபட்ட போதிலும், நில சீரமைப்பில், குத்தகை சட்டங்களும் அத்தகைய உபரி நிலங்களின் புனரமைப்பிலும் தரத்திலும் அளவிலும் நிறைய செய்ய வேண்டியிருக்கிறது. இப்பணியினை முழுமையாக வருவாய் நிர்வாக (அமைப்பு) இயந்திரத்தின் மூலமாகவே நில சீர்திருத்த நடவடிக்கைகளை ஆய்வு செய்தல் , கண் காணித்தல் மற்றும் ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க மாநில திட்டக் குழுவின் பிரிவு பரிந்துரை செய்கிறது. ஊராட்சிகளினுடைய மும்முக அமைப்புகளுக்கு இடையில் எல்லை வரையறைப் பங்கானது கீழ்கண்டவாறு இருக்கலாம். மாவட்ட வருவாய் அதிகார அமைப்பு அலுவல்களை மேற்பார்வையிடலிலும் ஒருங்கிணைப்பதிலும் மாவட்ட ஊராட்சிகளுக்கு அதிகாரமளிக்கலாம். ஆய்வு, மாவட்ட ஊராட்சிகளால் செய்யப்படலாம். ஊராட்சி ஒன்றியங்கள் சிற்றூராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைளைப் பொருத்தமட்டில் நில ஆவணங்களை மேம்படுத்தலாம் பராமரிக்கலாம். குத்தகை சட்டங்களிலும் உபரி நில பங்கீட்டிலும் பங்கேற்கலாம். நில உச்சவரம்பும் குத்தகை அளவு ஆகியவற்றை செயல்படுத்துவது தொடர்பான சட்ட விசாரணை நடத்துவதில் ஊராட்சி ஒன்றியமானது சட்ட அமைப்புக்கு உதவலாம். அனைத்து ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலும் ஊராட்சி வாரியான நில உச்சவரம்பு அளவுகளில் இதுவரை எடுக்கப்பட்ட மற்றும் எடுக்கப் படவுள்ள விவரங்களைத் தொகுக்க ஊராட்சி ஒன்றிய குழு ஏற்பாடு செய்யலாம். நில உச்சவரம்பு உபரி நிலத்தையும் நில ஒதுக்கீடு தேவைப்படும் தனி நபர்களை அல்லது குடும்பங்களையும் கண்டறிவதில் ஊராட்சிகளுக்கு உதவலாம். குத்தகை உரிமைகளைப் பாதுகாப்பதிலும் முறைப்படுத்துவதிலும், அவை வருவாய் நிர்வாகத்தினருக்கு உதவலாம். நில ஆவணங்கள் மேம்படுத்தலிலும் விவரங்களைப் பயன்படுத்தலிலும் ஊராட்சிகள் தன்னுடைய உதவியை நீட்டிக்கலாம். ஊராட்சி நிறுவனத்திற்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

## I. ஊராட்சிகள்

| தொ. எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | நில உச்சவரம்பு அளவுகள் | i) உபரி நில உடைமையாளர்களை அந்த ஊராட்சியில், பிற பகுதிகளில் அவர்களுடைய மொத்த நிலங்களைக் கண்டறிய உதவுதல்<br>ii) நிலச்சீரமைப்பு சட்டங்களின் செயலாக்கத்திற்காக சட்ட விசாரணைகள் நடத்துவதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல்.<br>iii) உபரி நில ஒதுக்கீடு தேவைப்படுகின்ற குடும்பங்கள், தனி நபர்களைக் கண்டறிய உதவுதல்.<br>iv) நில வளப்படுத்தும் அமைப்பிலும் தனி ஒதுக்கீட்டாளர் அல்லது அவர்களின் குழுவின் மேம்பாட்டிற்கு உற்பத்தியை உயர்த்தும் அளவுகளுக்கும் ஏற்பாடு செய்வதில் உதவுதல். |
| 2. | குத்தகை அளவுகோலைச் செயற்படுத்துதல் | i) வெளிப்படையான மற்றும் மறைமுகமான குத்தகை (பங்கு–குத்தகை உள்ளிட்ட) நிலையினைக் கண்டறிவதில் உதவுதல். பாதுகாப்பும் அதோடு கூட நேர்வுக்கேற்ப குத்தகை உரிமையை ஒழுங்குபடுத்துதல் அல்லது உரிமையாளர் உரிமையை உறுதி செய்தல் ஆகியவற்றில் வருவாய் அமைப்புக்கு அதன் பணியில் உதவலாம். |
| 3. | நில ஒருங்கிணைப்பு | i) சட்டத்தில் இருப்பது போல வெவ்வேறு நிலை செயற்பாட்டில் செயல் திறனுடைய மற்றும் உள்ளூர் குடிமக்களின் தொடர் ஈடுபாட்டினை அடைய முயலுதல்.<br>ii) உடைமையும் நிலப்பயன்பாடும், நில உரிமைகள் பொது நில நிலையும் சமுதாயச் சொத்துகள் நிலை போன்றவற்றில் வருவாயைத் தொகுப்பதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதலும் ஒவ்வொரு பட்டாதாரருடைய நில உடமைகள் தொகுப்பில் உதவுதலும்.<br>iii) தொகுக்கப்பட்டபின் தொகுப்புத்திட்டம் செயற்படுத்தலுடன் உண்மையில் ஒதுக்கப்பட்ட இடம், உடைமையின் அனுபவம், உறுதி செய்வதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல். |
| 4. | நில ஆவணங்களை மேம்படுத்தலும் பராமரித்தலும் | i) வேளாண்மை மற்றும் மேய்ச்சல் நிலம், தரிசு நிலம், நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள், சாலைகள், கரைகள் போன்ற ஏனைய சமுதாய நிலங்கள் தொடர்பான விபரங்களை மேம்படுத்த உதவுதல்.<br>ii) நில ஆவணங்களையும், மாறக்கூடிய செயல் முறைகளையும் மேம்படுத்துவதில் வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| தொ. எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. | நில உச்சவரம்பு அளவைச் செயற்படுத்தல் | i) வெவ்வேறு நில உச்ச வரம்பு சட்டங்களை செயற்படுத்துவதற்கு வட்டார வருவாய் நிர்வாகத்திற்கு உதவுதல். பல்வேறு ஊராட்சிப்பகுதிகளில் உள்ள உபரி நிலங்கள் கலந்தாய்வு செய்வதிலும், ஏழை விவசாயிகளுக்கு உபரி நில பங்கீட்டுப் பணிகளிலும் உதவுதலும். |
| 2. | குத்தகை அளவீடு செயற்பாடுகள் | i) குத்தகை சட்டம், பங்கு, பயிரிடும் முறை, செயலாக்கம் ஆகிய பணிகளில் வருவாய் அதிகாரிகளுக்கு உதவுதல். |
| 3. | நில ஒருங்கிணைப்பு | i) துண்டு நிலங்களை ஒருங்கிணைப்பதில் வருவாய் மற்றும் நில நிர்வாக அதிகாரிகளுக்கு உதவுதல். |
| | | ii) ஒரு தொடர் முறையில் சட்ட அமைப்புடன் ஒருங்கிணைத்தல். |
| 4. | நில ஆவணங்கள் மேம்படுத்தலும் பராமரித்தலும் | i) உரிமையாளர், உடைமையாளர் போன்றோரின் நில ஆவணங்களின் மேம்படுத்தலும் வட்டாட்சியர் அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் ஆகியோரின் பணிகளை ஆய்வு செய்தலும். |

## III. மாவட்ட ஊராட்சிகள்

| தொ. எண். | நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1 | மாவட்டத்தில் நில சீரமைப்பின் செயல்பாடு | i) மாவட்டத்தில் எல்லா நில சீரமைப்புச் சட்டங்கள், செயற்பாடுகள் மீதான வருடாந்திரத் தகுதி நிலை அறிக்கையை தயாரித்தல் சட்டமாற்றம் தேவைபட்டாலும் செயற்பாட்டுக் குறைபாடுகளைக் களைவதிலும் அரசுக்கு ஆலோசன வழங்குதல். |
| | | ii) வேளாண் நிலைக் குழு மூலமாக மாவட்டத்தில் நிலச்சீரமைப்பு நட்வடிக்கைகளை மறு ஆய்வு செய்தல். மாவட்ட வருவாய் அலுவலகம், இத்தகைய எல்லா ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டும். |

**நிர்வாகச் சிக்கல்கள் :**

09. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியராலும் கிராம அளவில் கிராம நிர்வாக அலுவலராலும் நிலச்சீரமைப்பு, நிலத் தொகுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பஞ்சாயத்து நிறுவனங்கள் செயலாக்கத்திற்கு வந்தபின் உபரி நிலங்களைக் கண்டறிந்து பகிர்வு செய்வதிலும், ஊராட்சி நிலையில் வந்தபின். குத்தகை ஆவணங்களைப் பராமரிப்பதிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை ஈடுபடுத்துதல் தவிர்க்க முடியாதது. ஊராட்சிகள். ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், குறிப்பட்ட பங்கிணை ஆற்றும், உபரி நிலத்தைக் கண்டறிதல். குத்தகை, பங்கு. பயிரிடுதல், ஏழைகளுக்கு உபரி நிலங்களை வழங்குதல் ஆகியவற்றைக் கிராம நிர்வாக அலுவலர் ஊராட்சியுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகும். ஊராட்சி ஒன்றிய அளவில், வட்டாட்சியர் மற்றும் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் மாவட்டத்தில் நிலச் சீரமைப்புச் கூட்டங்களை செயற்படுத்தவும். திட்டங்களைத்

தொகுக்கவும், ஒருங்கிணைப்பு, திட்டமிடுதல் மற்றும் அறிவுரை கூறுதல் ஆகியவை தொடர்பான முக்கிய பங்கினை மாவட்ட ஊராட்சிகள் ஆற்ற வேண்டும். நிலச் சீரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளாட்சி அமைப்புகளின் கலந்தறிதலையும் ஈடுபாட்டினையும் வருவாய்த் துறையானது நம்பிக்கையுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**நிதிச் சிக்கல்கள்:**

10. உபரி நில மேம்பாட்டுக்காகவும், விவசாயத்திற்காகவும் நில உச்சவரம்பைச் செயல்படுத்தவும், ஆதி திராவிடர் சிறப்புக்கூறு திட்டத்திற்காகவும் நில சீரமைப்பின் கீழ் ஆண்டுதோறும் 25 இலட்சங்கள் ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

**சட்டச்சிக்கல்கள்:**

11. நில நிர்வாகத்தில் ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றிய குழுக்களும் தங்கள் கடமைகளை நிறைவேற்ற தமிழ்நாடு ஊராட்சி சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் தந்துள்ள அதிகாரங்கள் பற்றி பத்தி 7ல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிலச்சீரமைப்பில் ஊராட்சிகளுக்கு இந்த சட்டமுறை அதிகாரத்தின்படி போதுமான அதிகாரங்கள் தரப்பட்டுள்ள போதிலும், இந்த ஏற்பாடு பற்றி அரசால் அல்லது உரிய அதிகார அமைப்புகளால் அறிவிக்கை சொல்லிடுதல் (அமைப்பு) அதிகாரங்களைச் செயற்படுத்துதலை விரிவுபடுத்தும்.